களம்-19 வெற்றி-2

இலஞ்சம் தவிர்! நெஞ்சம் நிமிர்!

பிப்ரவரி 2021

# நேர்மை நெறி

[ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்]

Regd.No.349/2001

"ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து வேண்டும் பனுவல் துணிவு".

# (NAERMAI NERI)

ரூ.10/-

# கடன் தள்ளுபடி என்பதும் தேர்தல் வாக்குகளுக்கு கொடுக்கும் லஞ்சமே



## லஞ்சம் = சாபம்

PUBLISHED BY

ஊழல் எதிர்ப்பு இயக்கம் சென்னை
பதிவு மற்றும் செயல் அலுவலகம் : 155, "நம்பகம்"
கொன்னூர் நெடுஞ்சாலை, அயன்புரம், சென்னை - 600 023.
Cell : 8778312823
e-mail : acmchennai2001@yahoo.co.in
Website : anticorruptionchennai.com

## தலைவர் மடல்

**அன்பார்ந்த உறுப்பினர் சகோதர சகோதரிகளே!**

**வணக்கம். இம்மடல் மூலம் மீண்டும் உங்களை தொடர்பு கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.**

எச்சரிக்கை: அன்பார்ந்த உறுப்பினர்களே, நமது இயக்கம் ஏற்கெனவே இரு நிர்வாகிகளை கோவிட்-19 வைரசுக்கு பலி கொடுத்துவிட்டது. கொரோனாவால் இனி ஒரு பலி கூட இருக்கக்கூடாது. கோவிட்தான் மிகவும் குறைந்துவிட்டதே என எண்ணி விட வேண்டாம். இதன் வீரியம் எப்போது எப்படி மாறும் என்பது மருத்துவ உலகுக்கே சவாலாக உள்ளது. எனவே, ஒவ்வொரு உறுப்பினரும், கோவிட்-19லிருந்து பாதுகாத்துக்கொள்ள, முறையான தடுப்பு மருந்து அனைவருக்கும் கிடைக்கும்வரை, அரசு அறிவித்துள்ள பாதுகாப்பு நெறிமுறைகளைக் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டுகிறோம்.

தமிழகத்தைப் பாழாக்கும் கழகங்கள்: கடந்த 60 ஆண்டுகளுக்குமேல், தமழகத்தை ஆண்ட கட்சியும் தற்போது ஆளும் கட்சியும், இல்லை எமது பார்வையில், தமிழகத்தை சீழித்து வந்த, சீரழித்து வருகின்ற, கட்சிகள் ஆடும் கோர வெறியாட்டங்கள் உச்சத்தை அடைந்துள்ளன. "நாங்கள் ஆட்சிக்கு வந்தால் விவசாயிகளின் கடன்களை முழுவதும் தள்ளுபடி செய்வோம்" என்று அறிக்கை விட்டார். தமிழகத்தை ஆணட கட்சியின் தலைவரை, ஒரு மாத வாக்கில் இதுவெல்லாம் வெற்று அறிக்கை என்று அதை கேலிசெய்த தமிழகத்தை ஆண்டு வருகின்ற கட்சி

இயக்கத்தின் ஆரம்பம் முதல், தன் வாழ்நாள் வரையில், தலைவர் : அமரர் **திரு.C.S.குப்புராஜ்** அவர்கள், தன் மறைவிற்கு பிறகும் தன் மகள் மூலம் கொடை வழங்கி இயக்கத்தின் வளர்ச்சிக்கு வித்திடுகிறார்.


வாய்மையே வெல்லும்

**நீலா கண் மருத்துவகம்**

**Dr.ஜெயந்தி ஆனந்தன், MBBS., D.O.,**

21, நல்லப்பன் தெரு, மைலாப்பூர், சென்னை - 600 004.

**போன் : 044-24642755 / 9884245069**

**பார்க்கும் நேரம் : திங்கள் முதல் வெள்ளி வரை**

காலை 9.30 முதல் 11.30 மணி வரை

மாலை 4.00 முதல் 8.00 மணி வரை



சனிக்கிழமை காலை 10.00 மணி

முதல் மாலை 4.00 மணி வரை



(ஞாயிறு விடுமுறை)

**தாணத்தில் சிறந்தது கண் தானம்**

திடீரென அந்தர் பல்டி அடித்து, "நீங்கள், என்ன, ஆட்சிக்கு வந்து நான்கு மாதங்கள் கழித்து மக்களை பிச்சைக்காரனாக்குவதை இப்போதே நான் செய்கிறேன் பார்" என்று உடனடியாக விவசாயிகளின் அனைத்து கூட்டுறவு வங்கிக் கடன்களையும் தள்ளுபடி செய்கிறேன் என்று அறிவித்தது. என்னே போட்டி.

இதில் சட்டத்தின் பார்வை: இந்திய அரிசியலமைப்பு சட்டமோ, அனைவருக்கும் பொருளாதார சமத்துவம் இருக்கும் வகையில் அரசு செயல்பட வேண்டும் என்றும் எந்த முடிவையும் அரசு எடுக்கும் முன், அதன் சாதக பாதககங்களை சீர்தோக்கிப் பார்த்து அதன் பின்னரே முடிவெடுக்க வேண்டும் என்றும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. இவ்வாறு, அரசு முடிவெடுக்கிறதா என்பதை சீர்தூக்கிப்பார்த்து அரசின் முடிவுகள் எதேச்சையாக, எந்தவித அடிப்படைக்கோட்பாடும் இன்றி எடுக்கப்பட்டதாயின் அதை ரத்து செய்யப்பட வேண்டும் என்று எண்ணி, மக்களாகிய நாம் உயர் மற்றும் உச்ச நீதிமன்றங்களிடம் அதிகாரத்தை அரசமைப்பு சட்டத்தில் வழங்கியுள்ளோம். எளிமையாக சொல்வதென்றால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தாங்கள் பதவியேற்கும் போது "அரசியலமைப்பு சட்டத்தின்படி நடப்பேன்" என்று எடுத்த உறுதிமொழிப்படி நடக்கிறார்களா?, அதாவது முடிவெடுக்கிறார்களா? என்று கவனித்து, அவர்கள் தங்கள் உறுதிமொழிகளை மீறி எடுக்கும் முடிவுகளை ரத்து செய்யவேண்டும் என்று மக்களாகிய நாம் அரசியலமைப்பு சட்டத்தின் மூலம் நீதிதுறைக்கு அதிகாரம் அளித்துள்ளோம். அதை செயல்படுத்த ஏதுவாக, நீதிபதிகள் ஒவ்வொருவரும், தாம் பதவியேற்கும்போது, "அரசியலமைப்பு சட்டத்தின்படி நடப்பேன் என்பதோடு, அரசியலமைப்பு சட்டத்தினை நிலை நிறுத்துவேன் என்றும்" உறுதி எடுக்கிறார்கள். ஆக, ஆளுங்கட்சி தடம் மாறி செல்லும்போது, அதாவது, சட்டவிரோத முடிவெடுக்கும் போது, உடனடியாக நீதிமன்றம் தலையிட்டு அது போன்ற முடிவுகளை ரத்து செய்திட வேண்டும். அது கிரிமினல் குற்றமாயின் சிறைத்தண்டனையும் வழங்க வேண்டும்.

ஒரு சில நீதிபதிகளின் செயல்பாடுகள்: அவ்வாறு, நீதிபதிகள் செயல்படுகின்றனரா என்றால், அது உண்மையில், எல்லா நிகழ்வுகளிலும் இல்லை என்பதே எமது தாழ்மையான கருத்து. மக்கள் வரிப்பணத்தை கொள்ளையடித்து சொத்து குவித்துவிட்டார் என்று குற்றம் சாட்டப்பட்ட ஜெயலலிதா, கீழமை நீதிமண்றத்தால் தண்டிக்கப்பட்டார். நீதித்துறையின் மாண்பு ஓங்கியது. கூட்டல் கழித்தலை தவறாகப்போட்டு, அவரை விடுவித்தார் உயர்நீதிமன்ற கர்நாடக உயர்நீதிமன்ற நீதிபதி. இது நீதித் துறைக்கே கரும்புள்ளியானது. அதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு காலதாமதம் செய்யப்பட்டு, இந்த கால தாமதத்தை பொறுக்காமல் இறைவனால் மரண தண்டணைஅளிக்கப்பட்ட பிறகே, தீர்ப்பு வழங்கப்பட்டது. இது மேலும் உச்சநீதிமன்றத்தின் மாண்பை குறைத்துவிட்டது என்பதுவே எமது கருத்து. , குற்றவழக்கில், கீழமை நீதிமன்றம், அரசு சொத்துக்களை கொள்ளை அடித்துள்ளார் ஜெயலலிதா என்பதை உறுதி செய்து தண்டனை வழங்கிய பிறகு, அவர் தமிழக முதல்வராக உள்ளாரே, அவர் தொடர்ந்து கொள்ளையடிக்க வாய்ப்பு உள்ளதே என்று கருதி, ஓரிரு மாதங்களில் தீர்ப்பு

**நேர்மை நெறியில் குறைந்த செலவில் விளம்பரம் செய்து பயன்பெறுவீர்!**

விளம்பரக் கட்டண விபரம்

முழுப்பக்கம் : ரூ.2000/- அரைப்பக்கம் ரூ.1000/- கால்பக்கம் ரூ.500/-

இதழில் வெளிவருகின்ற கட்டுரைகள் விளம்பரங்கள் படைபாளிகளையே சார்ந்தது.

நேர்மைநெறி நிர்வாகமோ, ஆசிரியரோ பொறுப்பல்ல.

அளிக்காமல், கால தாமதம் செய்து தமிழகத்தை மீண்டும் ஜெயலலிதா சீரழிக்க வழிவகை செய்துவிட்டது உச்ச நீதிமன்றம். இக்காலதாமதம், உச்ச நீதிமன்றத்தின் பாலான, எமது நம்பிக்கையை குறைத்துவிட்டது. கடவுள் என்று அழைக்கப்பட்டும் மதிக்கப்பட்டும் வருபவரும், பிரதமர் உட்பட அதிக அதிகாரம் வாய்ந்த எவரையும் சிறையில் தள்ளும் அதிகாரமும் கொண்டவருமான, ஒரு நீதிபதி, மக்களால் அவரது குடும்பத்திற்கான அனைத்து செலவுகளையும் ஏற்றுகொள்ளப்பட்ட நிலையிலும், ஆக, கடவுளுக்கு இணையான புகழ், அதிகாரம் இருந்தும், தாம் எடுத்துக்கொணட உறுதிமொழிப்படி நடக்க வில்லையே என்ற எமது மன வேதன சொல்லி மாளாதது. இதுதான், புராணங்கள் கூறும் கலியகமோ என்று எண்ணத்தோன்றியது. எனினும், ஒரு சில நீதிபதிகள் இதுபோன்று இருப்பினும், அனைவரையும் நாம் அவ்வாறு நினைக்க இயலாது. எனவே, பிற நீதிபதிகள் உடனடியாக இது போன்ற நிலைகளில் தலையிட்டு, தவறு நடக்காமல் இருக்க ஆவன செய்து மக்களின் எதிர்பார்ப்பை முழுவதும் பூர்த்தி செய்யவேண்டும்.

ஆக, நீதித்துறையின் இந்தக் காலதாமதங்களை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு அரசியல் வாதிகள் ஊழல் கோரதாண்டவங்கள் ஆடுகின்றனர். ஆக, தமது கொள்ளையைத் தொடர, மக்கள் வரிப்பணத்தால் மக்களுக்குக்கே லஞ்சத்தை இலவசம் என்ற போர்வையில் அளிக்கின்றனர். ஒருவர் 50 ஏக்கர் விவசாய நிலம் வைத்திருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். வேறு எந்தக்கடனும் இன்றி, தம்மிடம் இருக்கும் அளவுக்கு மிஞ்சிய 50 சவரன் தங்கத்தை வைத்து கூட்டுறவு வங்கியில் விவசாயத்திற்கு வட்டியில்லா கடன் பெற்றால், அதை ஏன் தள்ளுபடி செய்யவேண்டும். அவர் செய்த விவசாயம் பொய்த்துவிட்டிருப்பின் கடன் தள்ளூபடியில் அர்த்தம் உள்ளது. அனால், எந்தவித ஆய்வும் மேற்கொள்ளாமல் அனைத்து விவசாயிகளின் கடன்களும் தள்ளுபடி என்பது, மேலும், ஓரிரு மாதங்களில் தேர்தல் என்ற நிலையில், ஆளுங்கட்சி மக்களின் பணத்தை வைத்தே மக்களுக்கு கொடுக்கும் லஞ்சமேயன்றி வேறு ஏதும் இல்லை. இது கிரிமினல் குற்றமேயாகும். திமுக இலஞ்சம் கொடுப்பேன் என்கிறது, அதிமுக லஞ்சம் கொடுத்தே விட்டது. ஆக இரு கட்சியின் நிர்வாகிகளும் இந்தியத் தண்டணை சட்டம் பிரிவு 409 இன் படி ஆயுள் தண்டணைக்குரியவர்களே.

இந்த அரசியல்வாதிகளால் இந்திய அரசியலமைப்பு சட்டம் கற்பழிக்கப்படுவதை உடனடியாக நீதித்துறை தலையிட்டு தடுத்து நிறுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். இந்த இழிசெயல்களைத் தடுக்க, நாம்

அன்புடன்,

**(ந.சுப்ரமணியன்)**

# விவசாய கடன் தள்ளுபடியும், வாராக்கடன் தள்ளுபடியும்

-V.கார்த்திகை ராஜன்,
இயக்கப் பொதுச்செயலர்

இலஞ்சம் என்பது டிப்ஸ், சேவைக்கட்டணம், தரகுத்தொகை, அன்பளிப்பு, இலவசம் என்றெல்லாம் மாற்றப்பட்டு, தற்போது நமது அரசியல்வாதிகளால் கடன்கள் தள்ளுபடியாக வளர்ந்துள்ளது. ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் கழித்து வாராக்கடன்களை தள்ளுபடி செய்வது நமது அரசியல் தலைவர்களுக்கு பழக்கமாகி விட்டது.

நமது தமிழக முதல்வர் வரும் தேர்தலைக் கருத்தில் கொண்டு 12,110 கோடி ரூபாய் பயிக்கடனைத் தள்ளுபடி என்று அறிவித்துவிட்டார். இவ்வருடம் வறட்சி ஏதும் கிடையாது. ஆனாலும் தமிழக விவசாயிகள் வாக்குகளைக் கவர திடீரென்று ஆணையிட்டுள்ளார். ஆனால் மத்திய அரசு, பெரும் செல்வந்தர்கள் ஆடம்பர வாழ்க்கை சுகம் அனுபவிப்பதற்கு தேசிய வங்கிகளில் உள்ள வாராக்கடன்களை தள்ளுபடி செய்திருக்கிறது. கீழ்க்கண்ட தொகைகளை நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் கபளீகரம் செய்துள்ளது.

| தமிழக அரசு (விவசாயிகள் கடன்) | தொகை (கோடி ரூபாய்களில்) |
|---|---|
| 1996 | 20 |
| 1999 | 36 |
| 2001 | 256 |
| 2003 | 20 |
| 2004 | 125 |
| 2006 | 6526 |
| 2016 | 6095 |
| 2021 | 12110 (தற்போது) |

| மோடி அரசு (பெருநிறுவனங்களின் வாரா கடன்) | தொகை ** (கோடி ரூபாய்களில்) |
|---|---|
| 2014-16 | 24191 |
| 2016.17 | 108374 |
| 2017-18 | 161328 |
| 2018-19 | 146799 |
| 2019-20 | 61949 |
| மொத்தம் | 723361 |
| | |

** (இவற்றில் மத்திய அரசாங்கம் செய்த தள்ளுபடி அதிகமாகத்தெரிவது எல்லா மாநிலங்களின் மொத்த இழப்பீடுகள்)

ரூபாய் 12,110 கோடி பயிர்க் கடன் தள்ளுபடி என்ற அறிவிப்பில் பலனடைபவர்களில் 90 சதவீதமானவர்களுக்கும் மேலானவர்கள் அரசியல் கட்சிக்காரர்கள், செல்வாக்கானவர்கள், பயிர்க் கடனல்லாத வேறு காரணங்களுக்காக கடன் வாங்கியவர்கள் என்பதே யதார்த்தமாக இருக்கும் போது இதில் விவசாயிகள் எப்படி மகிழ்ச்சியடைவார்கள்?

அரசியல் காரணங்களால் தரப்படும் கடன் தள்ளுபடியால் விவசாயக் கூட்டுறவு வங்கிகள் மீள முடியாத அழிவுக்கு தள்ளப்படும் என்பது தான் யாராலும் மறுக்க முடியாத உண்மை கடன் வாங்குகிற பெரும்பாலான சிறுகுறு மற்றும் நடுத்தர விவசாயிகள் பெரும்பாலும் குறுகிய காலக் கடன்களை வாங்கி விளைச்சல் முடிந்தது. அதை அடைத்து விடுவதுதான் இயல்பு வாங்கிய கடனை முறையாக செலுத்த வேண்டும் என்ற தார்மீக உணர்வை தரைமட்டமாக்கி, நியாய உணர்வுள்ள விவசாயிகளையும் அறம் பிறழ வைக்கும் அநீதி தான் ஒட்டுமொத்த கடன் தள்ளுபடியாகும்.

அதிலும் பெரும்பாலான உண்மையான விவசாயிகளுக்கு சுலபத்தில் வங்கியில் கடன் கிடைப்பதில்லை நிலத்தை யாருக்காவது குத்தகைவிட்டோ, அல்லது சும்மாவாகவோ வைத்திருந்து, வேறு தொழில்கள் செய்வதற்கு முதலீடு தேவைப்படுவர்களே நிலத்தை காட்டி அதிகமாக வங்கிக் கடன் பெறுகிறார்கள் இவர்கள் தான் நீண்ட காலக் கடன் என்று வாங்கிக் கொண்டு தேர்தல் காலங்களில் எப்படியாவது ஒட்டுபொறுக்கி அரசியல்வாதிகள் தள்ளுபடி

செய்யத்தானே போகிறார்கள்..என வங்கிக்கு வாய்தா சொல்லியே காலம் தள்ளியவர்கள்.

அதிகாரத்தை பிடிப்பதற்கான - அரசாங்க செலவிலான முதலீடாக - இன்று விவசாயக்கடன் தள்ளுபடிகள் அரசியல் கட்சிகளுக்கு அமைந்து விட்டன என்பது தான் யாதார்த்தம்.. இந்த நாட்டின் நிதி ஆதாரங்கள் ஆக்கபூர்வமான விவசாய அடிப்படை கட்டுமானங்களுக்கு பயன்படுத்தப்படுமானால் விவசாயிகளுக்கு கடனே தேவையில்லை.

அரசாங்கம் நீர்வள மேலாண்மைக்கான நிரந்தர கட்டுமானங்களை உருவாக்கி பராமரிக்க முடிந்திருந்தால் தமிழ்நாட்டில் 20 லட்சம் விவசாயிகள் ஆழ்துளை கிணறுகளை தோண்ட லட்சக்கணக்கில் கடன்பெற்று அழிந்திருக்க வேண்டிய அவசியமே இல்லை.

பெரும் செல்வந்தர்கள் தொழில் தொடங்குவதற்காக மத்திய அரசாங்கத்தின் தேசிய வங்கிகள் மூலம் கடன் பெற்று கடனை செலுத்துவதில்லை. எல்லா தொழில்களும் ஊழல் மயமானதால், அவர்கள் யாரும் கடனைத் திரும்ப செலுத்துவதில்லை. ஆனால் அவர்களின் ஐந்து நட்சத்திர வாழ்க்கை நிலை எப்போதும் குறைவதில்லை. அரசியல்வாதியின் ஊழல் மூலம் அவர்கள் திரும்பவும் கடன் பெறுகிறார்கள். செல்வந்தர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்யாமல், கடனை தள்ளுபடி செய்வது எந்த முறையில் நாட்டுக்கு பயன் அளிப்பது என்று தெரியவில்லை.

இவ்வாறு செய்யப்படுகிற தள்ளுபடியால், உண்மையாய் வரி செலுத்தும் மத்திய வர்க்கத்தினர் தான் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். வங்கிகளின் தள்ளுபடி சுமையால் வாடிக்கையளர்களிடம் அதிக கட்டனம் வசூலிக்கிறார்கள். அரசாங்கமும் வரி விகிதத்தை உயர்த்தி நாணயமான வரி செலுத்துவோரின் சுமை அதிகப்பட்டிருக்கிறது.. இது மிகப்பெரிய ஊழலையே ஊக்கப்படுத்தும்.

இதே வழிமுறைகள் நீடித்தால், அவை கீழ்க்கண்ட விளைவுகளை ஏற்படுத்தும்:-

- தேசிய மற்றும் கூட்டுறவு வங்கிகள் பண நெருக்கடியை சந்திக்கும்
- கடன் வழங்குவதே ஊழல் செய்வதற்கே என்பதால் யாரும் திரும்ப செலுத்த மாட்டார்கள். கடனைத் திருப்பி செலுத்தினால் தான் சுழற்சி முறையால் மேற்கொண்டு வங்கிகளால் கடன் கொடுக்க முடியும். எனவே, கடன் கிடைப்பது அரிதாகிவிடும். அது தொழில்களையும் பாதிக்கும்.
- அரசு வரி விகிதங்கள் அதிகரிக்கும். நேர்மையானவர்கள் துன்பத்துக்குள்ளாவார்கள். நாடு வரி ஏய்ப்பு செய்பவர்களின் ராஜ்ஜியமாகிவிடும்.
- செல்வந்தர்களின் சொத்து பல மடங்காக உயரும். ஏழைகளின் ஏழ்மை நிலை பாதாளத்தை நோக்கி கீழிறங்கும்.
- நாணயமாக இருப்பவர்களின் எண்ணிக்கை குறையும். நல்லவர்களுக்கு கடன் ஏதும் கிடைக்காது. மத்திய வர்க்கம் வரிகளை மட்டுமே செலுத்தி, நியாயமாக உழைத்து சம்பாதித்த சொத்துக்களை இழப்பார்கள்.

## இயக்கத்துடன் தொடர்பு கொள்ள:

**திரு N சுப்ரமணியன், தலைவர் : 9444274352**
**திரு V கார்த்திகை ராஜன், பொதுச்செயலாளர் : 87783 12823**

**திருமதி பாக்யலட்சுமி, மேலாளர் : 90031 25142**

**E- Mail : acmchennai2001@yahoo.co.in**
**Website : anticorruptionchennai.com**

# யாருக்கான பட்ஜெட்?

தேசத்தின் வளர்ச்சி தான் முக்கியமாம்: அந்த தேசம் என்பதில் மக்கள் உள்ளடங்கியுள்ளார்களா? அல்லது பெருமுதலாளிகள் மட்டுமே கொண்டது தான் தேசமா? பெருமுதலாளிகளின் வளர்ச்சியே தேசத்தின் வளர்ச்சி என்பதாகக் கருதும் ஆளும் மத்திய அரசிடம் வேறு எப்படிப்பட்ட பட்ஜெட்டை நாம் எதிர்பார்க்கமுடியும்?

பெரும் தனியார் நிறுவனங்களுக்கு சலுகை அறிவிப்பு, பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகள் விற்பனை, பெட்ரோலுக்கு கூடுதல் புதிய வரி விதிப்பு, சமானிய மக்களுக்கு வருமான வரி வரம்பு உயர்த்தப்படாது போன்றவற்றை படிக்கும் பொழுது இது யாருடைய வளர்ச்சிக்கான பட்ஜெட் என்பதில் நமக்கு எந்தக் குழப்பமும வராது

பொதுவாக தனிநபர் வருமான வரிவரம்பு எந்த அளவு இந்த பட்ஜெட்டில் உயர்த்துவார்கள் என்பதை மட்டுமே கவனித்தில் கொண்டு நடுத்தர மக்கள் ஒவ்வொருவரும் பட்ஜெட்டையும் அணுகுவார்கள். அரசாங்கம் மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலை செய்யும் நடுத்தர வர்க்கத்து மக்களின் மிகப் பெரிய எதிர்பார்ப்பு என்பது விலைவாசி உயர்வு மற்றும் பணவிக்கத்திற்கு ஏற்றார் போல வருமான வரிவரம்பும் உயருமா? என்பது தான். அவர்களுக்கு பட்ஜெட்டில் அதிகம் தெரிந்தது தனி நபர் வருமானவரிவிலக்கு. அவை மட்டுமே தங்கள் பணத்தை மிச்சப்படுத்தும் என்று நினைக்கிறார்கள். ஆனால் அதைவிட மறைமுக வரியில் பணம் செல்வதை கவனத்தில் கொள்வதில்லை.

பெட்ரோல் மீது புதியதாக விதித்துள்ள வரி, செல்போன் மீது வரி உயர்வு என நாம் வாங்கும் ஒவ்வொரு பொருட்களின் மீதும் வரி செலுத்தி வாங்குகிறோம். இப்படி மறைமுகமாக நிறைய பொருட்கள் மீது உள்ள வரிகளுக்கு நம் பணம்தான் செல்கிறது.

<u>எதற்கு இந்த வரிவிலக்கு ?</u>

75 வயது மேலானவர்கள் அதுவும் பென்ஷன் மட்டும் வாங்கும் நபர்களுக்கு வருமான வரி தாக்கல் செய்ய வேண்டியதில்லை என்ற அறிவிப்பு என்ன நன்மை கொண்டு வரும்? உண்மையில் வருமான வரி விலக்கு உள்ளதா என்பதைக் குறிப்பிடவில்லை. வருமான வரி பிடித்தம் செய்யப்பட்டிருந்தால் அந்தப்பணம் திரும்பக்கிடைக்குமா என்பது தெரியவில்லை. பொதுவாக முதியவர்களுக்கு கிடைக்கும் பென்சன் தொகை மற்றும் வங்கி வட்டிக்கும் விலக்கு என்று குறிப்பட்டிருந்தால் நிம்மதியாக இருந்திருக்கும். இந்த கட்டுரையை படிக்கும் வாசகர்களின் வீட்டில் 75 வயது பென்சன் வாங்கும் நபர்கள் உள்ளார்களா என்று யோசித்துபார்த்தால் மிக மிக குறைவானவர்களே இருப்பார்கள். அதைவிட மிகப் கொடுமையான இந்த கொரோனா காலத்தை கடந்த மக்களுக்கு தனிநபர் வருமான வரிவிலக்கு சிறிது அளித்து இருந்தால் மிகப் பெரிய உதவியாக இருந்து இருக்கும்.

பிரதமர், கொரோனா மாதங்களில் பேசிய உரையில் தனியார் முதலாளிகள் தங்கள் பணியாளர்களை வேலையில் இருந்து நீக்காதீர்கள். அவர்கள் மீது பரிவு காட்டுங்கள் என்று ஒருநாளைக்கு 100 முறை தொலைக்காட்சி, வானொலியில் ஒளிபரப்பி கொண்டு இருந்தார்கள். பிரதமரின் வாசகத்தை நிதி அமைச்சர் கேட்கவில்லையோ என்று தோன்றுகிறது.

வேலை இழப்பு, தொழில் நலிந்து, ஒரு நாள் கூட பள்ளிக்கே செல்லாத குழந்தைகளுக்கு முழு கட்டணமும் செலுத்தச் சொல்லும் பள்ளிகள், சொந்த ஊரை சென்று சேர்ந்த மக்கள் இன்னும் நகரங்களை நோக்கி வர முடியாத சூழல் இவ்வளவு இருக்கும் ஒரு நாட்டில் சாமானியர்கள் எதிர்பார்ப்பது வருமானவரியில் சலுகை. ஆனால் அதைக் கூட நிறைவேற்ற மனமில்லாத ஆட்சியாக இது உள்ளது.

அதேபோலதான் சட்டமன்ற தேர்தல் நடைபெறும் மாநிலங்களுக்கு அறிவித்துள்ள நிறைய திட்டங்களையும் பார்க்க வேண்டியுள்ளது. ஒரு நாட்டின் வளர்ச்சி அனைத்து மாநிலங்களிலும் சீராக இருக்க வேண்டும். தேர்தல் நடைபெறும் மாநிலங்களுக்கு கூடுதல் திட்டங்கள், தேர்தல் நடைபெறாத மாநிலங்களுக்கு குறைவான திட்டங்கள் என்றால், பட்ஜெட்டில் கூட வாக்கு வங்கி கண்ணோட்டமா? என்று சலிப்படைய வைக்கிறது இந்த அரசு அனைத்து மாநிலங்களும் வளர வேண்டும் என்று நினைக்கிறதா? அல்லது தேர்தல் நடைபெறும் மாநிலங்கள் மட்டும் வளர்ந்தால்

போதும் என்று அரசு நினைக்கிறதோ என்னவோ?

இது "ஓட்டுபொறுக்கி அரசியலுக்கு பட்ஜெட்டை பயன்படுத்துவது போலுள்ளது"

பெட்ரோல்- டீசல், கேஸ் சிலிண்டர், மண்ணெண்ணெய் இந்த பொருட்கள் விலை ஏறினால் மிக மிக அதிக பாதிப்புக்கு உள்ளாவது சாதாரண மக்களே. தினமும் ஏறி வரும் பெட்ரோல் விலையில் பட்ஜெட்டில் லிட்டருக்கு ரூ.2.50 மற்றும் டீசல் மீது லிட்டருக்கு ரூ.4 வேளாண் கட்டமைப்பு மேம்பாட்டு கூடுதல் வரி விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த புதிய வரிவிதிப்பு எந்த பாதிப்பும் வராதபடி பெட்ரோல் மீது விதிக்கப்படும் கலால் வரி குறைக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார். அதாவது, உன்னுடைய பாக்கெட்டில் இருக்கும் 100 ரூபாய் எடுத்து மீண்டும் வேறு 100 ரூபாய் வைத்துவிடுகிறேன். அதனால் உங்களுக்கு எந்த நஷ்டமும் இல்லை என்பது போல் இருக்கிறது. எதற்கு கலால் வரி, சிறப்பு கலால் வரி குறைக்கப்பட்டு இந்த புதியவரியை விதிக்க வேண்டும். அதற்கு பதில் கலால் வரியில் உள்ள பணத்தையே பயன்படுத்தி கொள்ளலாமே?

இதனால் எந்த பாதிப்பும் மக்களுக்கு ஏற்படாது என்று எப்படி நிதி அமைச்சர் குறிப்பிடுகிறார் எனத் தெரியவில்லை. ஏன் கலால் வரி குறைத்து புதிய வரியை போடுகிறீர்கள்?

<u>விவசாயிகள் வருமானம் உயர்வா?</u>

விவசாயிகளின் வருமானத்தை உயர்த்த இந்த பட்ஜெட்டில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று பிரதமர் கூறுகிறார். ஆனால் பல மாதங்களாக வேளாண் சட்டத்தை திரும்பப் பெற போராடிவருபவர்கள் விவசாயிகள் என்பதை மறந்துவிட்டாரோ என்று தோன்றுகிறது. தேர்தல் என்றால், ஒவ்வொரு மாநிலத்திற்கும் சென்று மக்களை சந்திக்கும் பிரதமர் அந்த மக்கள் (விவசாயிகள்) உங்கள் பகுதிக்கு(டெல்லி) வந்து உள்ளார்கள் அவர்களை சந்திக்க ஏன் மறுத்து வருகிறார்?

16.5 லட்சம் கோடி விவசாயிகளுக்கு கடன் ஒதுக்கீடு, கடல் பாசி பூங்கா, புதிய மண்டிகள் திறப்பு இவையெல்லாம் விவசாய வளர்ச்சிக்கு என்று பட்ஜெட்டில் குறிப்பிட்டுள்ளனர். அதைவிட மிக எளிமையாக விவசாயிகளுக்கு விரோதமாகப் போட்ட மூன்று சட்டங்களை வாபஸ் வாங்கி இருக்கலாம். எல்லா விவசாயிகளும் வாங்க வந்து கடனை வாங்கிட்டுப் போங்க் நல்லா விளைச்சலைப் பெருக்கி அம்பானி,அதானியிடம் கொடுங்க.." என்பதை சொல்லாமல் செய்துள்ளார் பிரதமர்.

<u>பங்கு சந்தை ஏற்றம்</u>

வங்கிகளுக்கு 20,000 கோடி ஒதுக்கீடு, காப்பிட்டு துறையில் அன்னிய நேரடி முதலீடு 74% உயர்வு, 1 லட்சம் கோடியில் நீண்ட சாலைகள் அமைத்தல், மெட்ரோ ரயில் திட்டத்திற்கு ஒதுக்கீடு போன்ற அறிவிப்பால் பங்குசந்தை நேற்று ஒரே நாளில் 2000 புள்ளிகளுக்கு மேல் உயர்ந்தது. இவற்றை கருத்தில் கொண்டு பட்ஜெட் சிறப்பானதாக இருக்கும் என்று நினைப்பதைவிட இதனால் பெரும் நிறுவனங்கள் வளர்ச்சி அடையும் என்பதே உண்மை. அதைத்தவிர பொது மக்கள் வளர்ச்சிக்கோ, குறுப்பாக இந்த நாட்டில் 90 சதவிகித வேலை வாய்ப்புகளை தந்து கொண்டிருக்கும் சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு எந்தப் பிரயோஜனமும் இல்லை அவர்களின் வளர்ச்சிக்கு இவை வழிவகை செய்யாது. பங்குசந்தை உயர்வு அதில் முதலீடு செய்பவர்களான மிகச் சிறு கூட்டத்திற்கே பலனளிக்கும்.

புதிய வரி இல்லாதது நிம்மதியாக உள்ளது என்ற கருத்தை பலர் சொல்லிவருகின்றனர். அந்த அளவு மக்கள் பயத்தில் இருப்பது தெரியவருகிறது.

நிறுவனங்கள் வளரட்டும், பெரும் தனியார் முதலாளிகள் வளரட்டும் ஆனால் விளிம்புநிலை மக்கள், நடுத்தரமக்கள் நிறைந்த நாடுதான் இந்தியா. இவர்களின் வாழ்க்கை தரம் உயர, பொருளாதாரம் உயர குறிப்பிட்டு சொல்லும்படி இந்தபட்ஜெட்டில் என்ன சொல்லியுள்ளனர் என்று ஆராய்ந்தால் அப்படி எதுவும் இல்லை என்றே குறிப்பிடவேண்டியுள்ளது.

இந்த பட்ஜெட் சாமானியனை இளிச்சவாயனாகவே ஏமாற்றி வைத்திருக்கிறது. ஆனால் நாட்டின் வளர்ச்சி சாமனியனைக் கொண்டு தான் சாத்தியப்படும்.

## வருமான வரி கட்டுபவர்

இந்தியாவில் சம்பளம் வாங்கி குடும்பத்தினை நடத்தும் இளிச்சவாயனை வேறு எங்கும் பார்க்க முடியாது.
இந்த Mr. & Ms. இ.வா தான் வருமான வரி கட்டுவார்.
இவர் தான் எல்லா பொருட்களுக்கும் ஜி.எஸ் டி வரி கட்டுவார்.
இவர் தான் பெட்ரோல் / டீசலில் ஒன்றியத்துக்கும், மாநிலங்களுக்கும் தாரை வார்ப்பார்.
இது போதாதென்று கூடுதல் வரிகள்.

சரியாய் கணக்கு போட்டால் சராசரியாக வருடத்திற்கு 10 இலட்ச ரூபாய் சம்பாதிக்கும் ஒருவர் இந்தியாவில் பாதிக்கும் மேலான பணத்தினை அரசிற்கு கொடுக்கிறார். ஆனால் அரசு இவர்களுக்கு என்ன. செய்யும் என்றால், அந்த வரியில் (exemption) 10,000ரூ தந்துருக்கேன், இந்த தளர்வு (waive off) 5,000ரூ தந்துருக்கேன் என்று சொல்லும். இந்த முட்டாள் மிடில் கிளாசும் அதை நம்பி இந்த அரசாங்கங்களை வாழ வைக்கும். பாதிக்கு மேல் ஒரு சாமான்யனிடம் இருந்து பிடுங்குவதற்கு பெயர் வரியல்ல, வழிப்பறி.

ஏனென்றால் மார்வாரிகளும், குஜராத்திகளும், அன்னிய முதலீட்டாளர்களும் கோவித்து கொள்வார்கள். ஆனால் சம்பளம் வாங்கும், கூலி வாங்கும் சாமான்யனை எப்படி வேண்டுமென்றாலும் அடிக்கலாம். வெளுக்கலாம். உறியலாம். மிரட்டலாம். வரி கட்டவில்லை என்றால் கிரெடிட் ஸ்கோர் தகுதி கிடையாது என்று சொல்லலாம். தன்னுடைய கஷ்டத்திற்காக ஒருவர் செட்டில்மெண்ட் போனால், கிரெடிட் ஸ்கோரில் கை வைத்து அவர்கள் திரும்பவும் organized sectorக்குள் நுழையவே முடியாமல் மீண்டும், மீண்டும் பெரும் கடனாளியாக தனியார் கந்துவட்டியை நோக்கி விரட்டலாம்.

சர்வசாதாரணமாக பல ஆயிரம் ரூபாய் டே ட்ரேடிங் (Day Trading) செய்யும் ஆளுக்கான STT என்பது 0.125% + short term capital gains tax.

ஆனால் வெறும் ரூ.20க்கு ரீசார்ஜ் செய்யும் ஒரு விளிம்பு நிலை தொழிலாளியிடம் அந்த 20 ரூபாயிலும் ஜிஎஸ்டி வரி 18% என்று பிடுங்கி விடுவார்கள். ஜிஎஸ்டி வரி இந்தியாவில் inequality இருக்கிறது என்பது தொடர்ச்சியாக சொல்லப்படும் குற்றசாட்டு. பாலிசியே இவ்வளவு inequal-ஆக இருக்கும் போது எப்படி inequality மாறும்? அந்த இடைவெளி அதிகரிக்க தான் செய்யும்.

இதை தான் India Inc-க்கும், சந்தை மந்தைகளும் வரலாற்று சிறப்பு மிக்க பட்ஜெட் என்று கொண்டாடினால், இந்த நாடு நாசமாய் போகட்டும்.

---

**இயக்கத்துக்கு நன்கொடைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.**
**நன்கொடைகள் வருமான வரிச்சட்டம் பிரிவு 80 (பு) யின் கீழ் விலக்கு(சலுகை) உள்ளது. பணத்தை கீழ்க்கண்ட வங்கிக்கு NEFT மூலமாக அனுப்பலாம் .**

**Indian OverSeas Bank, Ayanavaram Branch (IFSC Code: IOBA0000009)**
**Savings A/C No: 000901000041657**

## நேர்மையாளர்களின் வாழ்வில் சில சம்பவங்கள்

**காந்திஜி மறுத்த பொருட்கள்:**

ஆங்கிலேயரை எதிர்த்தும், உப்புக்கு விதிக்கப்பட்ட வரியை எதிர்த்தும் உப்பு சத்தியாகிரகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த காந்திஜி, ஆங்கிலேய அரசால் கைது செய்யப்பட்டு, எரவாடா சிறையில் அடைக்கப்பட்டார்.

காந்திஜி பாரிஸ்டர் பட்டம் பெற்ற வக்கீலும் பெரிய மேதையும் கூட. எப்பொழுதும் அவர் படித்துக்கொண்டிருப்பார். அதை நன்கு அறிந்திருந்த சிறை அதிகாரி, ஒரு நாள் அவர் அறைக்குள் மேசை, நாற்காலி, காகிதங்கள், எழுதுகோல்கள், மைபுட்டி, புத்தகங்கள், பத்திரிக்கைகள் மற்றும் பல உபயோகமுள்ள பொருட்கள் அனைத்தையும் கொண்டு வைத்தார். அவற்றை கவனித்த காந்திஜி, "இவையெல்லாம் யாருக்காக?" என்று கேட்டார்.

ஏன்ன இப்படி கேட்கிறீர்கள்? எல்லாம் உங்களுக்குத்தான். இன்னும் உங்களுக்கு என்னென்ன வேண்டுமோ சொல்லுங்கள்: அவசியம் ஏற்பாடு செய்கிறேன்" என்று பணிவுடன் கூறினார் சிறை அதிகாரி. "எனக்கு எதுவும் வேண்டாம். இவற்றை எல்லாம் எடுத்துச் செல்லுங்கள்" என்றார் காந்திஜி.

அதைக்கேட்டு ஆச்சரியமடைந்த சிறை அதிகாரி, உங்களுக்குத் தேவையானதை எல்லாம் கொடுக்க அரசாங்கம் தான் ஏற்பாடு செய்துள்ளது. அதை ஏன் வேண்டாமென்று மறுக்கிறீர்கள்? என்று கேட்டார்.

அதற்கு காந்திஜி, "அரசாங்கம் ஏற்பாடு செய்யலாம். ஆனால் இவற்றையெல்லாம் வாங்குவதற்கு செலவிட்ட பணம், மக்களின் வரிப்பணமாகும். அதை என் ஒருவனுக்காக அரசாங்கம் செலவு செய்வதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. தயவு செய்து எல்லாவற்றையும் எடுத்துச்செல்லுங்கள் "என்று கூறி, அவற்றையெல்லாம் ஏற்றுக்கொள்ள திட்டவட்டமாக மறுத்துவிட்டார்.

"இப்படியும் ஒரு மனிதரா?" என்று எண்ணி வியந்தார் ஆங்கிலேய சிறை அதிகாரி.

# இயக்கத்தில் இணைந்தவர்களை வாழ்த்தி வரவேற்கிறோம்

### 2021-22ல் இணைந்தவர்களின் ஆண்டு உறுப்பினர் பெயர் மற்றும் விலாசம்

| | | |
|---|---|---|
| AM.2/21-22<br>திரு.N.A.இராமலிங்கம்,<br>22C/78, செட்டி தெரு,<br>புவனகிரி - 608601<br>கடலூர் மாவட்டம்<br>செல்: 9486786621 | AM.3/21-22<br>திரு.கோ.சீனிவாசன்,<br>29, வைகை தெரு,<br>கண்ணங்குடி ரோடு,<br>சிதம்பரம் - 608601<br>கடலூர் மாவட்டம் | AM.4/21-22<br>திரு.முகமது ஹனிபா,<br>29/14, பாப்பான் கோடி தெரு,<br>பரங்கிபேட்டை,<br>கடலூர் - 608502<br>செல்: 9500584401 |
| AM.5/21-22<br>திரு.C.சக்திவேல், B.A.,<br>109/1, எட்டையபுரம் வளைவு<br>ரோடு, கோவில்பட்டி,<br>தூத்துக்குடி - 628501<br>செல்: 9994845436 | AM.6/21-22<br>திரு.R.ராமச்சந்திரன்,<br>முத்துகுமரன் டீ கடை பஸ்<br>நிலையம் அருகில்,பரங்கிபேட்டை,<br>புவனகிரி, கடலூர்-608502<br>செல்: 9500909759 | AM.7/21-22<br>திரு.K.ஜோதீஸ்வரன்,<br>பர்திரிகை நிருபர், 209, 4வது<br>குறுக்கு தெரு, ஜெகலஷ்மிபுரம்<br>நகர், நூலம்பூர், சென்னை- 95<br>செல்: 7812885154 |
| AM.8/21-22<br>திரு.B.M..மனோகரன்,<br>2/1, புதிய எண்.7,<br>வெங்கடேஷ்வரா நகர் 2வது<br>மெயின் ரோடு, வேளச்சேரி,<br>சென்னை-42, செல்:9884490307 | AM.9/21-22<br>திரு.B.பாலாஜி,B.Com.,<br>44, ரெயில்வே பார்டர் ரோடு,<br>கோடம்பாக்கம்,<br>சென்னை - 600024<br>செல்: 9283592385 | AM.10/21-22<br>திரு.R.தாண்டவராயன்,<br>53, சின்ன தேவாங்கர் தெரு,<br>கீழ்புவனகிரி,<br>புவனகிரி TK, கடலூர்-608601<br>செல்: 9566910975 |

# பட்ஜெட் 2021

”இந்த பட்ஜெட் பொருளாதாரத்தை மீட்காது”: ஜோதி சிவஞானம்

திங்கட்கிழமையன்று இந்திய நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மத்திய நிதிநிலை அறிக்கையின் முக்கிய அம்சங்கள் குறித்து சென்னைப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறையின் தலைவர் ஜோதி சிவஞானம், பிபிசியின் செய்தியாளர் முரளிதரன் காசி விஸ்வநாதனிடம் பேசினார். அதிலிருந்து:

கே. 2020 - 21ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை குறித்து ஒட்டுமொத்தமாக உங்களுடைய பார்வை என்ன?

ப. பொதுவாக நம்முடைய அரசு அளிக்கும் புள்ளிவிவரங்கள் குறித்த நம்பகத்தன்மை இல்லாமல் இருந்தது. பொருளாதாரம் எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கிறது, வேலை வாய்ப்பின்மை எந்த அளவுக்கு இருக்கிறது என்பதெல்லாம் குறித்து சரியான புள்ளிவிவரங்களை வெளியிட வேண்டுமெனக் கோரப்பட்டு வந்தது. இந்த முறை அதைச் சரியாக செய்திருக்கிறார்கள். நம்முடைய பொருளாதாரத்தின் நிலையை ஒரே ஒரு எண் மூலமாகத் தெரிந்துகொள்ளலாம். நம்முடைய நிதிப் பற்றாக்குறை எவ்வளவு என்பதுதான் அது. அதாவது, இந்த ஆண்டு அரசு தன்னுடைய செலவை ஈடுகட்ட வருவாய்க்கு மேல் எவ்வளவு கடன் வாங்குகிறார்கள் என்பதுதான் இந்த பற்றாக்குறை. இது இந்த ஆண்டு ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.5 சதவீதம் என அறிவித்திருக்கிறார்கள். Fiscal responsibility and budget Management act-ன்படி, இந்தப் பற்றாக்குறை ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3 சதவீதத்தைத் தாண்டக்கூடாது.

ஏனென்றால் ஒரு அரசு தன் விருப்பத்திற்குக் கடன்வாங்கி செலவழித்துவிட்டால், அடுத்துவரும் அரசுகள் திணற வேண்டியிருக்கும் என்பதால், இந்த முடிவெடுக்கப்பட்டது. ஆனால், இப்போது பற்றாக்குறை 9.5 சதவீதமாக இருக்கிறது.

இதற்கு முக்கியமான காரணம், கோவிட் தாக்கத்திற்கு முன்பிருந்தே வரி வருவாய் தொடர்ந்து சரிந்துவந்தது. 30 லட்சம் கோடி ரூபாய்க்கு பட்ஜெட் போடப்பட்டது. 24 லட்சம் கோடி ரூபாய் வருவாய் வரும் எனச் சொன்னார்கள். ஆனால், 15.5 லட்சம் கோடி ரூபாய்தான் வருவாய் வந்தது. அடுத்ததாக, 30 லட்சம் கோடி ரூபாய் என்றிருந்த செலவு 34 லட்சம் கோடி ரூபாயாகத் திருத்தப்பட்டது. ஆகவே, நடப்பு ஆண்டுக்கு (2019- 20) 18.5 லட்சம் கோடி ரூபாய் கடன் வாங்கவிருக்கிறார்கள்.

இதற்கு முக்கியமான காரணம், ஐந்தரை லட்சம் கோடி ரூபாய் வர வேண்டிய வரி வருவாய் வரவில்லை. நேரடி வரி வருவாயில் மட்டும் நான்கரை லட்சம் கோடி ரூபாய் வரவில்லை. இந்த காலகட்டத்தில்தான் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வருவாய், சொத்து மதிப்பு, லாபம் ஆகியவை அதிகரித்திருக்கிறது. ஆனால், அரசுக்கு வரி வருவாய் குறைந்திருக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்பாக கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வரிச் சலுகை அறிவிக்கப்பட்டது. வரி சதவீதம் 32லிருந்து 22ஆக குறைக்கப்பட்டது. இதன் மொத்த மதிப்பு 1.45 லட்சம் கோடி என்றார்கள். பிறகு இது 1.55 லட்சம் கோடியாக உயர்த்தப்பட்டது. முதலில் இந்தச் சலுகை அந்த ஆண்டுக்கு மட்டும் என்றுதான் கருதப்பட்டது. ஆனால், ஒவ்வொரு ஆண்டும் இந்தத் துண்டு விழுந்தது.



BBC ஜோதி சிவஞானம்

நம்முடைய பொருளாதாரம் ஏற்கனவே வீழ்ச்சியில் இருக்கிறது. இந்த ஆண்டு பொருளாதார வளர்ச்சி மைனஸ் 7.7 என என்எஸ்ஓ கணித்திருக்கிறது. ஆனால், மற்ற அமைப்புகள் மைனஸ் 10 சதவீதம் என்று சொல்கிறார்கள். நம் வாழ்நாளில் இவ்வளவு வீழ்ச்சியை நாம் சந்தித்ததில்லை. ஆனால், அதே நேரம் விலைவாசி உயர்ந்துவருகிறது. ரிசர்வ் வங்கி பல முறை வட்டி விகிதத்தைக் குறைத்தும், அது கடனாக மக்களிடம் சென்று சேரவில்லை. ஆகவே விலைவாசி உயர்ந்திருக்கிறது. இப்போது அரசாங்கம் 15 லட்சம் கோடி ரூபாய் கடன் வாங்குவதால், விலைவாசி மேலும் உயரும். பொருளாதாரம் மீளாது. அதற்கு அரசு செலவுசெய்ய வேண்டும். ஆனால், செலவுசெய்ய வாய்ப்பே இல்லை

- நிர்மலா சீதாராமன் இந்திய பட்ஜெட் தாக்கல் - எதற்கு எவ்வளவு நிதி ஒதிக்கீடு
- இந்தியா அரசுக்கு நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டது ஏன்? நிர்மலா சீதாராமன் விளக்கம்

இந்த பட்ஜெட் குறித்து ஏதேதோ சொன்னார்கள். ஒன்றும் இல்லை. இதுபோலத்தான் ஊக்க நடவடிக்கைகள் பற்றிப் பேசினார்கள். 30 லட்சம் கோடி ரூபாய் என்றார்கள். ஏதும் இல்லை என்று ஆகிவிட்டது. கல்வி, சுகாதாரத்திற்கு பெரிய அளவில் நிதி ஒதுக்கப்படவில்லை. பட்டினி, வறுமை, வேலை இழப்பு அதிகமாகியிருக்கிறது. வேலை வாய்ப்பை உருவாக்கும் திட்டம் ஏதும் இல்லை. இது பெரிய ஏமாற்றம்.

கே. கடந்த ஆண்டு இந்தியப் பெருளாதாரம் சந்தித்த பிரச்சனைகளுக்கு இந்த பட்ஜெட்டில் தீர்வு இருக்கிறதா?

ப. நம் பொருளாதாரம் கீழே சென்றதற்கு முக்கியமான காரணம், தேவை குறைந்ததுதான். அதாவது சாதாரண மக்களின் செலவு வெகுவாகக் குறைந்தது. நிறுவனங்கள் முடக்கப்பட்டதால் அவர்கள் முதலீட்டுச் செலவு எதையும் செய்யவில்லை. ஏற்றுமதி - இறக்குமதி பாதிக்கப்பட்டது. இம்மாதிரி சூழலில் அரசாவது செலவுசெய்ய வேண்டும். அரசும் செலவுசெய்யாத நிலையில் பொருளாதாரம் கீழே சென்றது.

இந்த கோவிட் காலகட்டத்தில் பெட்ரோல் - டீசல் மீதான கலால் வரி 48 சதவீதம் உயர்த்தப்பட்டது. ஏற்கனவே, இந்த அரசு பதவியேற்றதிலிருந்து எரிபொருள் மீதான வரி 250 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது. டீசலுக்கு மட்டும் 1,000 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது.

கே. நீங்கள் பெட்ரோல், டீசல் மீது விதிக்கப்பட்டிருக்கும் வரி குறித்து குறிப்பிட்டீர்கள். இந்த நிதிநிலை அறிக்கையில், பெட்ரோல் மீதும் டீசல் மீதும் சிறப்பு வரி - செஸ் - விதிக்கப்பட்டிருக்கிறது.

ப. இது மிகவும் தவறு. இப்படி மறைமுக வரியை அதிகரித்துக்கொண்டே செல்லக்கூடாது. இந்தியாவில் பணக்காரர்களின் எண்ணிக்கையும் அவர்களிடம் குவியும் சொத்துகளும் அதிகரித்துக்கொண்டே போகின்றன. ஆகவே, அவர்களுக்கு wealth tax விதிக்கலாம். தவிர, கார்ப்பரேட் முதலீடுகள் சரிந்துகொண்டே வருகின்றன. அவர்கள் முதலீடுகளைச் செய்வார்கள் என்ற நம்பிக்கையில்தான் வரிச்சலுகை அளிக்கப்பட்டது. அப்படி முதலீடுகள் ஏதும் நடக்காத நிலையில், இந்த வரிச்சலுகைகள் எதற்காக? நிதிநிலை அறிக்கையை அளித்த பிறகு, ஒன்றரை லட்சம் கோடி ரூபாய்க்கு சலுகையை அறிவிக்கிறார்கள். இந்த ஒன்றரை லட்சம் கோடி ரூபாயும் சேர்ந்துதான் நம்முடைய கடன் அதிகரிக்கிறது. அந்த வரிச் சலுகைகளை திரும்பப்பெற்றிருக்கலாம்.

மேலும், 10 கோடி ரூபாய்க்கு மேல் வருவாய் ஈட்டுபவர்களுக்கு 5 சதவீதம் சிறப்பு வரி விதித்திருக்கலாம். ஆனால், அப்படி ஏதும் செய்யவில்லை. அதற்குப் பதிலாக, மறைமுக வரியை அதிகரிக்கிறார்கள். பெட்ரோலின் அடிப்படை விலை 30 ரூபாய்தான். நாம் 100 ரூபாய்க்கு வாங்குகிறோம். இது உலகத்தில் எங்குமே இல்லாத நிலை.

இந்தக் கோவிட் தாக்குதலால் 40 சதவீதம் பேர் வறுமையில் தள்ளப்பட்டிருக்கிறார்கள். பொருளாதார அடுக்கின் கீழ்தட்டில் உள்ள 40 கோடிப் பேர் வேலை இழந்திருக்கிறார்கள். இவர்களுக்கு நேரடியாக ஏதாவது செய்ய வேண்டாமா? அப்படி எதுவுமே இல்லை.

நரேந்திர மோடி பிரதமராகப் பதவியேற்றவுடன் 100 நாள் வேலை திட்டத்தை நாடாளுமன்றத்தில் எள்ளி நகையாடினார். "இந்தத் திட்டத்தை நான் நிறுத்தமாட்டேன். காங்கிரஸின் மிகப் பெரிய தோல்வியின் சின்னமாக இதைக் காண்பிப்பதற்காக வைத்திருப்பேன்" என்று கேலி செய்தார். இன்றைக்கு அந்தத் திட்டம்தான் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு உதவியிருக்கிறது.

பல்வேறு மாநிலங்களில் இருந்து திரும்பிச் சென்றவர்கள் இப்போது 100 நாள் வேலைத் திட்டத்தில் பதிவுசெய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால், பல மாநிலங்களில் 100 நாட்கள் வேலை அளிக்காமல் 45 நாட்கள் வேலைதான் தருகிறார்கள். கீதா கோபிநாத்கூட இதனைப் புகழ்ந்திருக்கிறார். அந்தத் திட்டத்திற்கு கூடுதல் நிதியை ஒதுக்கியிருக்கலாமே... உணவு மானியத்தை அதிகரித்திருக்கலாமே..

கே. கடந்த ஆண்டு இந்தியப் பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டபோது "ஏ" வடிவில் பொருளாதாரம் மீளும் என்றார்கள். அது நடக்கும் சாத்தியம் தென்படுகிறதா..

ப. முதல் காலாண்டில் 24 சதவீதம் பொருளாதார வீழ்ச்சி. இரண்டாவது காலாண்டில் மைனஸ் 7.5 சதவீதம் வீழ்ச்சி. மைனஸ் 24 சதவீதத்திலிருந்து மைனஸ் 7.5 என வீழ்ச்சி குறைந்திருப்பதை வைத்து, ஏ வடிவில் இந்தியப் பொருளாதாரம் மீளும் என்கிறார்கள். பட்ஜெட்டின்போது மூன்றாவது காலாண்டின் புள்ளிவிவரத்தை வெளியிட்டிருக்க வேண்டும். இப்போதுவரை வெளியிடவில்லை. என்ன காரணம்? நிலைமை மோசமாக இருக்கிறது என்றுதான் அர்த்தம்.

இரண்டாவது காலாண்டில், கோவிட் முடக்கத்திலிருந்த கடைகள் திறக்கப்பட்டன. பண்டிகைக் காலம் வந்தது. இந்த காலாண்டில் நிலைமை என்னவென்று தெரிந்துவிடும். யாருமே செலவு செய்யாதபோது எப்படி பொருளாதாரம் மீளும்?

கார்ப்பரேட் நிறுவனங்களின் லாபம் அதிகரித்திருக்கிறது. ஆனால், மற்ற அனைத்துத் தரப்பு மக்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். வேலை இழப்பு நடந்திருக்கிறது. சம்பளம் இழந்திருக்கிறார்கள். சம்பளம் குறைந்திருக்கிறது. வேலை நேரம் அதிகரித்திருக்கிறது. கார்ப்பரேட் நிறுவனங்களின் விற்பனை அதிகரிக்கவில்லை. மாறாக, அவர்கள் ஊழியர்களுக்கு அளிக்க வேண்டிய சம்பளம் லாபமாக மாறியிருக்கிறது.

கே. வரவிருக்கும் நிதியாண்டில் பொருளாதார வளர்ச்சி 11.5 சதவீதம் இருக்கும் என்கிறார்கள். அது சாத்தியமா?

ப. வரவிருக்கும் காலாண்டு வளர்ச்சியைப் பார்த்தால் அது தெரியும். ஆனால், அப்படி இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனென்றால், உச்சியிலிருந்து கீழே விழுந்தவர்கள் எழும்போது, வளர்ச்சியைப் போலத்தான் இருக்கும். அதற்குப் பிறகு தொடர்ந்து வளர்கிறீர்களா என்பதுதான் கேள்வி. நம் பொருளாதாரம் இரண்டு ஆண்டுகள் பின்னுக்கு சென்றுவிட்டது. இந்த ஆண்டின் GDP 225 லட்சம் கோடி ரூபாயாக இருக்கும் என கருதினோம். ஆனால், அது 195 லட்சம் கோடி ரூபாயாகத்தான் இருக்கிறது. ஆகவே நாம் பின்னோக்கிச் சென்றிருக்கிறோம். இந்த 11 சதவீத வளர்ச்சிக்குப் பிறகு, 6.8 சதவீத வளர்ச்சிதான் இருக்குமென்று சொல்லியிருக்கிறது ஐஎம்எப். இந்த வருட வளர்ச்சி - 10 சவீதம் என்கிறது ஐஎம்எப். இந்த இரண்டு எண்களை விட்டுவிட்டு, 11.5 சதவீதத்தை மட்டும் பேசுவது எப்படி?

நாம் மீண்டும் 80களில் இருந்த வளர்ச்சி விகிதத்திற்குச் செல்லவிருக்கிறோம். ஐ.மு.கூ. ஆட்சியில் இருந்ததைப் போன்ற வளர்ச்சியெல்லாம் இனி சாத்தியமே இல்லை. பதினொரு சதவீத வளர்ச்சிக்குப் பின்பாக, 6 - 5 - 4 சதவீத வளர்ச்சி என்று போனால், நாம் 70 ஆண்டுகளுக்குப் பின்னால் செல்கிறோம்.

கே. மத்திய அரசு செயல்படுத்திவந்த நேரடித் திட்டங்களின் நிலை (Centrally sponsered schemes) என்ன?

ப. திட்டக் குழு தேவையில்லை என்று சொல்லி இவர்கள் அதை மூடினார்கள். திட்டக் குழு இருந்தபோது முதல்வர்கள் அதில் கருத்துக்களைச் சொல்ல முடியும். கலந்தாலோசனை இருக்கும். அந்த வாய்ப்புகள் இல்லாமல் போய்விட்டது. மாநில அரசுகளோடு கலந்தாலோசிக்கக்கூடிய எந்த ஒரு நிறுவன அமைப்பும் இப்போது இல்லை. ஆனால், மத்திய அரசே செயல்படுத்தும் திட்டங்களை அப்படியே வைத்திருந்தார்கள்.

மூன்று - நான்கு லட்சம் கோடி ரூபாயை அவற்றுக்காக ஒதுக்கீடு செய்வார்கள். ஆனால், இப்போது அது முடியவில்லை. 100 நாள் வேலை வாய்ப்புத் திட்டம், உணவுப் பாதுகாப்புச் சட்டம் போன்றவையும் இதில் வருவதுதான் சிக்கல். இதில் மாநிலங்கள் 40 சதவீதத் தொகையைத் தர வேண்டும். முதலில் மாநிலங்கள் இந்தத் திட்டத்திற்கு செலவழிப்பது நின்றது. இப்போது மத்திய அரசும் கொடுப்பதில்லை. இப்படி இருதரப்பிலும் நிதி இல்லாமல், இம்மாதிரித் திட்டங்கள்

பாதிக்கப்படுகின்றன. தவிர, உணவு மானியம் கடந்த ஆண்டு 1.45 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்தது. ஆனால், இந்த ஆண்டு குறைந்திருக்கிறது. ஆகவே, இனி மத்திய அரசு செயல்படுத்தும் திட்டங்களை நிறுத்திவிடலாம்.

கே. வழக்கமாக உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்குவது குறித்து பெரிதாக பேசப்படும். இந்த முறை அந்த ஒதுக்கீடு எப்படியிருக்கிறது?

ப. 2019ல் செங்கோட்டையிலிருந்து பிரதமர் பேசினார். 5 ட்ரில்லியன் பொருளாதாரத்தை அடைவதற்காக 100 லட்சம் கோடி ரூபாயை அடிப்படைக் கட்டுமானத் திட்டங்களில் முதலீடு செய்வோம் என்றார்கள். அதில் அரசின் பங்கு என்ன, தனியாரின் பங்கு என்ன என்பதெல்லாம் குறித்து நிதியமைச்சர் விளக்கினார். தவிர, இந்தத் திட்டத்திற்கான முதலீடு 11 லட்சம் கோடி ரூபாய் அதிகரித்து 111 லட்சம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்படும் என்றார் நிதியமைச்சர்.

ஆனால், கடந்த ஆண்டு பட்ஜெட்டில் 4.12 லட்சம் கோடி ரூபாயைத்தான் ஒதுக்கீடு செய்தார்கள். அதில் செலவுசெய்தது 2.1 லட்சம் கோடி ரூபாய் மட்டும்தான். வரும் ஆண்டில் 5 லட்சம் கோடி ரூபாய் முதலீடு என்கிறார்கள். 111 லட்சம் கோடி ரூபாய் எங்கே... 5 லட்சம் கோடி ரூபாய் எங்கே...?

பல அறிவிப்புகளை "அடுத்த ஐந்தாண்டுகளில்.. அடுத்த ஐந்தாண்டுகளில்" என்கிறார்கள். அடுத்த ஐந்தாண்டுகளில் இவர்களே நீடிப்பார்கள் என்பது என்ன உறுதி? இவர்கள் ஐந்தாண்டுகளுக்கு பட்ஜெட் போட முடியாது.

கே. பொதுத் துறை நிறுவனங்களை விற்பனை செய்வது தொடர்பான இலக்குகள் கடந்த ஆண்டு எட்டப்பட்டதா? புதிதாக என்ன சொல்லியிருக்கிறார்கள்?

ப. அது ஒரு பேரழிவு என்றுதான் சொல்ல முடியும். பொதுத் துறை நிறுவனங்களை விற்பதன் மூலம் 2.15 லட்சம் கோடி ரூபாயை திரட்டத் திட்டமிடப்பட்டிருந்தது. 15 ஆயிரம் கோடி ரூபாய்தான் திரட்ட முடிந்தது. காரணம், அந்த நிறுவனங்களை வாங்க யாரும் தயாரில்லை. ஏர் இந்தியாவை விற்கத் திட்டமிட்டார்கள். ஆனால், அது நடக்கவில்லை. இந்த ஆண்டு அந்த இலக்கை 1.76 லட்சம் கோடி ரூபாயாக குறைத்திருக்கிறார்கள். பொதுப் பங்கு விற்பனை இலக்குக் குறைக்கப்படுவது இதுதான் முதல் முறை. திரும்பவும் எல்ஐசியின் பங்குகளை விற்போம் என்கிறார்கள்.

கடந்த ஆண்டு எச்பிசிஎல்லை விற்க முடிவுசெய்தார்கள். அதை யாரும் வாங்கவில்லையென்றவுடன் ஓஎன்ஜிசியை வலியுறுத்தி அதனை வாங்கச் செய்தார்கள். ஒரு அரசு நிறுவனம் இன்னொரு அரசு நிறுவனத்தை வாங்குவது எப்படி பொதுப் பங்குகளை விற்பதாகும்? இதனால், ஓஎன்ஜிசியின் பங்கு விலை குறைந்தது. இப்படியாக, அரசு நிறுவனங்களை யாரும் வாங்க முன்வருவதில்லை.

கே. ரயில்வே திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு சரியாக இருக்கிறதா?

ப. இதிலும் அடுத்த ஐந்தாண்டுகளுக்கு என்றுதான் சொல்கிறார்கள். முதலீட்டுச் செலவுகளைப் பொறுத்தவரை, இந்த ஆண்டு 4.12 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 2.12 லட்சம் கோடி ரூபாய்தான் செலவழிக்கப்பட்டுள்ளது. இதில் ஒரு லட்சம் கோடி ரூபாய் பாதுகாப்புத் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ஒரு லட்சம் கோடிதான் உள்கட்டமைப்பில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதில்தான் ரயில்வேயும் வரும். ஆகவே, வெறும் அறிவிப்புகளால் எந்தப் பயனும் இல்லை.

கே. இந்த பட்ஜெட்டின் விளைவு என்னவாக இருக்கும்?

ப. நாட்டின் பொருளாதாரம் தொடர்ந்து சரிந்து வந்தது. கோவிட் அதனை இன்னும் அதள பாதாளத்தில் தள்ளியது. கோடிக்கணக்கான மக்கள் வேலையிழந்து, வருமானமிழந்து பாதிக்கப்பட்டார்கள். வளர்ச்சி விகிதம் மைனஸ் 10ஆக உள்ளது. விலைவாசி உயர்ந்துள்ளது. இவைதான் நம் பிரச்சனைகள். இவற்றைச் சந்திக்க நம் பட்ஜெட்டில் எந்தத் திட்டமும் இல்லை. இவை அதிகமாகத்தான் வாய்ப்பு உள்ளது. 15 லட்சம் கோடி ரூபாய் கடன் வாங்கி, வட்டி மட்டும் 8 லட்சம் கோடி ரூபாய் கட்டப்போகிறோம். இதைக் கற்பனையாவது செய்ய முடிகிறதா? இந்தச் சூழல் எப்படி பொருளாதாரத்தை மேம்படுத்தும்? ஒரே நல்ல விஷயம் கோவிட் தடுப்பூசிக்கு 32 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதுதான். ஆனால், யாருக்கெல்லாம் அது கிடைக்கும் என்பது தெளிவாக்கப்படவில்லை.

# முக்கிய தொலைபேசி எண்கள்

| அலுவலகம்/ முகவரி | தொலைபேசி | தொலைநகல் |
|---|---|---|
| மாநில மனித உரிமை ஆணையம்<br>தலைவர் , மனித உரிமைகள்<br>கிரீன்வேஸ் சாலை, ராஜா அண்ணாமலைபுரம்,<br>சென்னை – 600 028. | 044-24951495,<br>044-24951486 | |
| சட்டப் பணிகள் ஆணையம்<br>மாண்புமிகு நீதிபதி<br>100, வடக்குக் கோட்டை சாலை,<br>உயர்நீதிமன்றம், சென்னை – 600 104. | 044-25342834,<br>044-25343144 | |
| தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையம்<br>11வது தளம், லோக் நாயக் பவன்,<br>கான்மார்கெட், புதுடில்லி – 110 003.<br>இயக்குநர்<br>தாழ்த்தப்பட்டோருக்கான தேசிய ஆணையம்<br>2வது தளம், பிளாக் – 5<br>சாஸ்திரி பவன், சென்னை – 600 006. | | |
| உள்துறைச் செயலாளர்<br>தலைமைச் செயலகம்<br>சென்னை – 600 009.<br>அலுவலகம் :<br>பொதுத்துறை :<br>உள்துறை : | 044-25671555<br>044-25671622<br>044-25671113 | 044-25670596 |
| காவல்துறைத் தலைமை இயக்குநர்<br>காமராசர் சாலை,<br>மயிலாப்பூர், சென்னை – 600 004. : | | 044-28447755 |
| தலைமை நீதிபதி உயர்நீதி மன்றம்<br>சென்னை – 600 101.<br>அலுவலகம் : | 044-25340410 to<br>–25340416 | 044-25332301 |
| மதுரை உயர்நீதி மன்றம் | 0452-2433036 to<br>- 2433038 | |
| National Human Reights Commission<br>Foridkot House,<br>Coperinicus Marg,<br>New Delhi – 110 001 | :011 – 23382514 | |
| லஞ்ச ஒழிப்பு புகார்<br>1) Vigilance Commissioner<br>Personnel and Administrative Reforms Department<br>Secretariat, Chennai 600 009<br>Email: parsec@tn.gov.in<br>(2)The Director,<br>Vigilance and Anti-Corruption,<br>293,MKN Road, Collectors Nagar, Alandur,Chennai,Tamil Nadu-600016.<br>Chennai – 600 028.<br>Phone-E-mail: dvac@nic.in<br>3) CHENNAI ZONE<br>Joint Director and Head of Zone,<br>III Floor, E.V.K., Sampath Building, College Road, Chennai 600006. | 044-25665566<br>044-22321090/<br>22321085/<br>22310989/<br>22342142<br>044-28232756 (Direct),<br>044-28272358<br>(General), | 044-28232755 |

## முக்கிய தொலைபேசி எண்கள்

| | | |
|---|---|---|
| State of Tamil Nadu, Kerala & Pondicherry. | 09444446240 | |
| சிறைத் துறை தொடர்புகள்:<br>சிறைத்துறை இயக்குநர்,<br>தாளமுத்து நடராசர் மாளிகை,<br>எண் .1, காந்தி இர்வின் சாலை,<br>சென்னை – 600 008. | .044-28521306,<br>28521512 | 044-28522803 |
| கூடுதல் சிறைத்துறைத் தலைவர்<br>சென்னை மண்டலம் - | 044-28521306,<br>28521512 | 044-28522803 |
| திருச்சி மண்டலம் – | 0431- 2420366 | 0431-2422065 |
| மதுரை மண்டலம் – | 0452-2603302 | 0431-2603402 |
| கோவை மண்டலம் - | 0422 – 2383625 | 0422-230 3500 |
| சிறைகள் :_ | | |
| புழல் I : | 044 – 26590200 | 044-26590615 |
| புழல் II | 044- 26590350 | 044 – 26590410 |
| வேலூர் | 0416 - 220003 | 0416 – 233472 |
| திருச்சி | 0431 – 2333212 | 0431 – 2333643 |
| கடலூர் | 04142 – 2335027 | 04142-2335714 |
| மதுரை | 0452 - 2602131 | 0452 – 2602160 |
| பாளையங்கோட்டை | 0462 - 2521845 | 0462 – 2532080 |
| கோவை | 0422 - 2303062 | 0422 – 2302466 |
| சேலம் | 0427 - 2403551 | 0427 – 2403426 |
| சிறுவர் பள்ளி புதுக்கோட்டை | 04322 - 222220 | 04322 – 225417 |
| வேலூர் பெண்கள் | 0416 - 220035 | 0416 – 233473 |
| திருச்சி பெண்கள் சிறை | 0431 - 2333809 | 0431-23332567 |
| சென்னை பெண்கள் சிறை அலு. | 044 - 26590320 | |
| அவசர உதவி அனைத்திற்கும் | 911 | |
| வங்கித் திருட்டு உதவிக்கு : | 9840814100 | |
| மனிதஉரிமைகள் ஆணையம் : | 044-22410377 | |
| மாநகரபேருந்தில அத்துமீறல் : | 09383337639 | |
| போலீஸ் : | 100 &<br>SMS : 9500099100 | |
| போலீஸ் மீது ஊழல் புகாருக்கு : | SMS : 9840983832 | |
| போக்குவரத்து விதிமீறல் : | 103 &<br>SMS : 98400 00103 | |
| தீயணைப்புத்துறை | 101 | |
| விபத்து | 100,103 | |
| ஆம்புலன்ஸ் | 102,108 | |
| பெண்களுக்கான அவசர உதவி | 1091 | |
| குழந்தைகளுக்கான அவசர உதவி,<br>குழந்தைகள் பாதுகாப்பு, குழந்தை<br>திருமணத்தை நிறுத்துவதற்கு | 1098 | |
| முதியோர்களுக்கான அவசர உதவி | 1253 | |
| அவசர காலம் மற்றும் விபத்து | 1099 | |
| கடலோர பகுதி அவசர உதவி | 1093 | |
| தேசியநெடுஞ்சாலையில் அவசர<br>உதவி | 1033 | |
| விலங்குகள் பாதுகாப்பு | 044- 22354959/<br>22300666 | |
| ரத்த வங்கி அவசர உதவி | 1910 | |
| கண் வங்கி அவசர உதவி | 1919 | |

# பிச்சை ஓடு

ஒரு ஊரில் ஒரு பிச்சைக்காரன் ஒருவன் இருந்தான்.

அவனுடைய சொத்து என்று பார்த்தால் அழுக்குப் பிடித்த உடை, கரிபிடித்த ஒரு பிச்சை ஓடு என இவ்வளவுதான். இந்த சூழ்நிலையில் தினமும் அவன் அந்த பிச்சை ஓட்டை நீட்டி எல்லோரிடமும் பிச்சை கேட்பது அவன் வழக்கம். எவன் வந்தாலும் பிச்சை கேட்பான்.

ஒருநாள் ஒரு துறவியிடம் பொய் தன் பிச்சை ஓட்டை அவர் முகத்துக்கருகில் நீட்டி பிச்சைக் கேட்டான். முதலில் முகம் சுழித்த அவர், சற்று நிதானத்துக்கு வந்து, அவனையும், அந்த ஓட்டையும் மாறி மாறி பார்க்க தொடங்கினார்.

சட்டென்று அவனிடமிருந்த அந்த பிச்சை ஓட்டை பிடுங்கினார். பிச்சைக்காரன் பயந்து போனான். துறவி தன் பிச்சை ஓட்டை எடுத்துக்கொள்வாரோ என்று பயம்தான். ஆனால் அந்த துறவியோ அந்த ஓட்டை மேலும் கீழும் ஆராய்ந்தார்.

பிறகு பிச்சைக்காரனைப் பார்த்து "எவ்வளவு காலமா பிச்சை எடுக்கிறே? எனக் கேட்க, "நெனப்பு தெரிஞ்ச பாலத்துல இருந்தே இதாங்க சாமி!" என்றான் பிச்சைக்காரன்.

இந்தப் "பிச்சை" ஓட்டை எவ்வளவு காலமா வச்சிருக்க? என அவர் மறுபடியும் கேட்க...

எங்க தாத்தா, அப்பான்னு இரண்டு தலைமுறைக்கு முன்னாடில இருந்தே இந்த ஓட்டை வச்சிருக்கோம். யாரோ ஒரு மகான் கிட்ட பிச்சை கேட்டப்போ அவர் இந்த ஓட்டைக் கொடுத்து, "இதை வச்சுப் பொழைச்சிக்கோ"-ன்னு குடுத்தாராம் என்றான்.

அந்த துறவி "அடப்பாவிகளா! மூணு தலைமுறையா இந்த ஓட்டை வச்சு பிச்சைதான் எடுக்கறீங்களா?" எனக் கோபமாக கேட்க.. பிச்சைக்காரனுக்குப் புரியவில்லை.

துறவி அமைதியாக அந்தப் பிச்சை ஓட்டை ஒரு சிறு கல்லினால் சுரண்டத் தொடங்கினார்.

பிச்சைக்காரன் துடிதுடித்துப் போனான். "சாமி..! எங்கிட்ட இருக்கற ஒரே சொத்து அந்த ஓடுதான். நீங்க பிச்சை போடாட்டியும்... பரவால்ல. அந்த ஓட்டக் குடுத்துடுங்க சாமீ..!" என பரிதாபமாக கேட்க.. துறவி சிரித்துக் கொண்டே மேலும் வேகமாக அந்த ஓட்டை சுரண்ட தொடங்கினார்.

பிச்சைக்காரன் அழுதான். அங்கலாய்த்தான்.

"ராசியான ஓடு சாமி! மகான் கொடுத்த ஓடு சாமி. அதை சுரண்டி உடைச்சிடாதீங்க சாமி" என அலறினான்.

துறவியோ ஓட்டை சுரண்டிக்கொண்டெ இருந்தார். சுரண்டச் சுரண்ட, அந்த ஓட்டின் மீதிருந்த கரியெல்லாம் உதிர்ந்து.. மெள்ள மெள்ள... மஞ்சள் நிறத்தில் பளீரிட்டுப் பிரகாசிக்க துவங்கியது தங்கம்...!

பிச்சைக்காரனின் கண்கள் அகலமாக விரிந்தது, இத்தனை நாள் தங்கத் திருவோட்டிலா பிச்சையெடுத்து நின்றோம். அடக் கொடுமையே என தன்னையே நொந்து கொண்டான்.

ஓட்டின் அருமை தெரியாமல் அதை பிச்சையெடுக்க பயன்படுத்திய தன் முன்னோர்களை காறி துப்பினார். பிச்சைக்காரனின் கையில் அந்த தங்க ஓட்டைக் கொடுத்த துறவி மிகவும் வேதனையுடன் சொன்னார்!

"அந்த மகான் கொடுத்த தங்க ஓட்டை வச்சிக்கிட்டு இந்த ஊருலேயே பெரிய பணக்காரங்களா இருந்திருக்க வேண்டியவங்க நீங்க கடைசியில, அதை பிச்சை எடுக்க உபயோகப் படுத்திட்டீங்களேடா?" இனியாவது ஓட்டை வைத்து ஒழுங்காக வாழுங்கடா என்று திட்டிவிட்டு போனார். தமிழக மக்களும் அந்த பிச்சைக்காரன் போல தான், தங்களிடம் இருக்கும் தங்க திருஓட்டில் பிச்சையெடுக்க வாழ்கிறார்கள்.

ஓட்டின் மகிமையை உணர்வார்களோ... அன்றே தமிழகம் உலகில் உயர்ந்து விளங்கும்.

# பொதுவாழ்க்கையில் புடம்போட்ட தங்கம் கக்கன்!

மகாத்மா காந்தியின் செயல்பாடுகளால் பெரிதும் ஈர்க்கப்பட்டு, நேர்மையான வாழ்க்கைப் பாதையில் பயணித்த பல்லாயிரக்கணக்கான இளைஞர்களில் கக்கனுக்கு சிறப்பிடம் உண்டு. தாழ்த்தப்பட்ட வகுப்பில் பிறந்தவரான கக்கன் பொருளாதாரத்தில் நலிவுற்ற பின்னணியில் உருவானவர். தன் நேர்மையால் கடின உழைப்பால் தியாகங்கள் நிறைந்த வாழ்க்கையால் உயர் நிலையை எட்டினார்.



நேர்மையான அரசியலுக்கு ஓர் இலக்கணமாகத் திகழும் கக்கனின் வாழ்க்கை குறித்து இளைய தலைமுறையினர் கண்டிப்பாக அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

தமிழ்த் தாயின் தவப்புதல்வரான கக்கன் மதுரை மாவட்டம், மேலூர், தும்பைப்பட்டியில் 1908-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 18 ஆம் தேதி பிறந்தார். தன்முனைப்பு மிக்கவரான கக்கன் வறுமை நிறைந்த குடும்ப சூழலால் பன்னிரண்டாம் வயது வரை மட்டுமே பள்ளிக்கூடம் செல்ல முடிந்தது. அதன்பிறகு ஒரு பண்ணைக்குச் சென்று வேலை செய்யத் தொடங்கினார்.

அறிவாற்றல் மிக்க தன் மகன் சிறு வயதிலேயே வேலைக்குச் செல்வதை கக்கனின் தந்தையார் விரும்பவில்லை. தன்னுடைய ஒரு நிலத்தை அடமானம் வைத்து கக்கனை தொடர்ந்து படிக்க வைத்தார்.

சுதந்திரப் போராட்டம் நாளுக்கு நாள் வீரியமிக்கதாக மாறிக்கொண்டிருந்த கால கட்டம் அது. காந்தியடிகள் இப்போராட்டத்திற்கு தலைமை ஏற்ற பிறகு வெகுஜன போராட்டமாக மாறியது.

காந்தியடிகள் மதுரைக்கு வந்திருந்த போது அவரை சந்தித்தார் கக்கன். மதுரையில் அவர் பயணித்த இடங்களுக்கெல்லாம் உடன் சென்றார். மதுரைக்கு வந்திருந்த போது தான் ஆடை உடுத்துவதில்கூட தன்னை மேலும் எளிமைப்படுத்திக் கொண்டார் காந்தியடிகள்.

அதிகாலை 3:30 மணிக்கெல்லாம் எழுந்து இரவு 11 மணி வரை ஒவ்வொரு நிமிடத்தையும் திட்டமிட்டு பயன்படுத்திக் கொள்பவர் காந்தி. அவருடைய நேர்மை, எளிமை, கொள்கையில் உறுதி போன்ற ஆளுமைகளை அருகில் இருந்து கவனித்த கக்கன் தாமும் அத்தகைய பண்புகளை இறுதி வரை கடைபிடிப்பது என உறுதி பூண்டார்.

1942-இல் வெள்ளையனே வெளியேறு இயக்கம் நாடு முழுவதும் உச்சத்தை அடைந்திருந்தது. அதை ஒடுக்க ஆங்கிலேய அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருந்தது.


காங்கிரஸ் கட்சியின் கொள்கை மற்றும் போராட்ட விவரங்களை துண்டுப்பிரசுரம் மூலம் மக்களுக்கு தெரிவிக்கும் செயல்பாட்டை ரகசியமாக செய்துகொண்டிருந்தார் கக்கன். போலீசார் எப்படியோ இதைக் கண்டுபிடித்து அவரை கைது செய்தனர்.

அவரிடம் விசாரணை நடத்தி அவருடன் தொடர்புடைய சுதந்திரப்போராட்ட வீரர்கள் அனைவரையும் கைது செய்ய போலீஸ் தீவிரம் காட்டியது.

இதற்காக கக்கனை தனி அறையில் வைத்து துருவித் துருவி விசாரித்தனர். சித்திரவதை செய்தனர். ஆயினும் அவரிடமிருந்து எந்தத் தகவலையும் பெறமுடியவில்லை. வேறுவழியின்றி கக்கனின் மனைவி சொர்ணம் பார்வதியை அழைத்து வந்தனர். அந்த அம்மையார் முன்னிலையில் வைத்து கொடூரமாக



- முனைவர் திருக்குறள் தாமோதரன்


BUDGET 2021: HERE'S HOW GOVT WILL RAISE AND SPEND MONEY
In Budget'21, 51% of finances will come from borrowings and GST collections while interest payments, State's share of taxes and central sector schemes will account for bulk of the expenditure in 2021-22
WHERE RUPEE COMES FROM
5p Non-debt capital receipts
3p Customs
36p Borrowings & other liabilities
15p GST
14p Income tax
13p Corporation tax
8p Union Excise duty
6p Non-tax revenue
WHERE RUPEE IS SPENT
5p Pension
20p Interest payments
16p States share of taxes & duties
13p Central sector schemes
10p Finance Commission & other transfers
10p Others
9p Centrally sponsored schemes
9p Subsidies
8p Defence
* Break-up for every rupee

Registered with the Registrar of Newspapers for India, New Delhi Regn.No.**TNBIL/2003/10419**

SSP/Chennai City North Divn. Regn.No.**TN/CCN/671/2018-20**

**PERMITTED TO POST WITHOUT PREPAYMENT VIDE WPP NO. TN/PMG(CCR)/WPP 533/2018-2020**




# லஞ்சம் தவிர்! நெஞ்சம் நிமிர்!

# நேர்மை நெறி

**ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்**

ஆசிரியர் : வி.ஆர்.சந்திரன்

இணை ஆசிரியர் : வே.கார்த்திகை ராஜன்

Permitted dates of posting 7th to 13th
Posted at Patrika Channel
(Egmore RMS/1) Chennai. On 12th February 2021

If Undelivered Please Return to:
**ACM, 155, KONNUR HIGH ROAD, AYANAVARAM, CHENNAI-23**

Owned by ANTI CORRUPTION MOVEMENT, CHENNAI and published on its behalf by M.RAGHUPATHY (9444896165) from : No.155, "Nambagam" Konnur High Road, Ayanavaram, Chennai - 600 023 and printed by Thiru.S.G.PARTHASARATHY, at VPS PRINTERS, No.292, T.H.Road, Chennai-600005. Editor : V.R.CHANDRAN.